## In the Court of the District Munsif, Eraniel

## Original Suit No. 34/2008

Deposition of the DW2

Name : அழகேசன்

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date :04.11.2025

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, District Munsif Court, Eraniel in accordance with the Provision of Act XLIV of 1893.

**முதல் விசாரணை**

எனது பெயர் அழகேசன். நான் கேரளாவில் வேலை பார்த்து வருகிறேன். நான் குன்னங்கல், ஆல்விளையில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் அடிப்படையில் தற்போது சாட்சியமளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான், அதில் குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் விலாசம் என்னுடையது தான். உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை தெரிந்து அறிந்து கொண்டு தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான், எனக்கு படிக்க தெரியாது, ஆவண எழுத்தாளர் படித்து காட்ட கையெழுத்து செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் சாட்சி கையொப்பம் செய்த உயில் என் தாயாரால் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி சாட்சிகையெழுத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் நேரில் சென்று போடவில்லையென்றால் சரியல்ல, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று தான் கையெழுத்திட்டேன். என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு யார் அழைத்து சென்றார் என்றால் எனது அம்மா அழைத்து சென்றார். மேற்படி உயிலை நிரூபிக்க வேண்டி தான் எனது அம்மா என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் போய் கையொப்பம் செய்யும் போது என்னுடன் வேறு நபர் சாட்சி கையெழுத்து செய்தாரா என்றால் மற்றொரு நபர் கையெழுத்து செய்தார், அந்த நபர் யார் என்று எனது அம்மாவிற்கு தான் தெரியும். அந்த நபர் எனது அம்மாவிற்கு வேண்டிய நபரா என்றால் இருக்கலாம். மேற்படி உயிலில் எத்தனை செண்ட் குறிப்பிடப்பட்டது என்றால் 7.5 செண்ட் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 7.5 சென்டில் எனது அம்மாவிற்கு எவ்வளவு உரிமம் என்றால் அதில் பாதி உரிமம் எனது அம்மாவிற்கு உண்டு. மேற்படி உயிலில் சொத்திற்கு நான்கு பக்கம் எல்கை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அம்மா என்னை விட அதிகம் படித்துள்ளாரா என்றால் இல்லை. எனது அம்மாவை நான் எந்த இடத்திற்கும் தனியாக விடுவதில்லையென்றால் ஏதேனும் முக்கியமான காரியங்களுக்கு தனியாக செல்வார்கள். உயில் எழுதுவதற்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் எனது அம்மாவை அழைத்து சென்றேனா அல்லது எனது அம்மா என்னை அழைத்து சென்றாரா என்றால் எனது அம்மா தனியாக சார்பதிவாளர் அலுவலகம் வந்தார், நான் தனியாக அங்கு சென்றேன். எனது தம்பி ஸ்ரீகிருஷ்ணன் திருமணத்தில் நான் கலந்து கொள்ளவில்லையென்றால் சரிதான். நான் கையொப்பம் இட்ட உயில் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் 3 பக்கங்கள் கொண்டது. 3 பக்கங்களில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் கையொப்பம் செய்துள்ளேன். நான் செல்வதற்கு முன்பு உயில் எழுதப்பட்டு தயார் நிலையில்

இருந்தது என்றாலும் நான் சென்றதும் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். எனது அம்மாவை மீண்டும் வீட்டிற்குஅழைத்து சென்றது யார் என்றால் அவரே சென்று விட்டார். நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லையென்றால் சரியல்ல. நான் கையெழுத்திடும் போது நான் மட்டும் தான் உண்டு என்றால் சரியல்ல, நான் எனது அம்மா மற்றும 3வது நபர் இருந்தார். முதலில் நான் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, எனது அம்மா கையொப்பம் செய்தார். எனது அம்மா எத்தனை கையெழுத்து செய்தார் என்றால் 3 கையொப்பம் செய்திருப்பார்கள். யாருக்கு உயில் எழுதி கொடுத்தார்கள் என்றால் எனது தங்கை லட்சுமிக்கு எழுதி கொடுத்தார்கள். நான் மேலே குறிப்பிட்ட உயில் எழுதுவதற்கு முந்தைய தினத்தில் நான் சென்ற இடத்தில் லட்சுமி இருந்தாரா என்றால் இல்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் லட்சுமி இருந்தாரா என்றால் இல்லை. சார்பதிவாளர் அலுவலகம் அல்லாமல் வேறு அலுவலகத்தில் சென்று கையொப்பம் செய்தேனா என்றால் செய்யவில்லை. நான் எனது சகோதரிக்கு வேண்டி எனது சகோதரனின் மனைவியை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எனது தாயார் மற்றும் சகோதரியுடன் சேர்ந்து இந்த உயில் பத்திரத்தை தயாரித்து உள்ளோம் என்றால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் கையொப்பம் இட்டேன் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில் பற்றிய எந்த விவரமும் தெரியாமல் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

2ம் வாதி மேற்படி குறுக்கு விசாரணையை adopt செய்கிறார்.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்